மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்:1, உசிலம்பட்டி
முன்னிலை: திரு.சு.மகாராஜன், பி.ஏ.பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1
2023-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் நாள் புதன்கிழமை

***சி.சி. எண்: 38/2015***

*(CNR No.TNMD 17-0000 76 2015)*

அரசுக்காக: சார்பு ஆய்வாளர்,
உசிலம்பட்டி நகர் கா.நி.கு.எண்:254/14 . . . வாதி

/எதிர்/

1.பாண்டியராஜன் 49/14 த/பெ பழனியாண்டி
2.பூங்கா 47/14 க/பெ பாண்டியராஜன்
3.சந்தியா 29/14 த/பெ பாண்டியராஜன் . . . எதிரிகள்

| | | |
|---|---|---|
| 1 | சி.சி. எண். *38/2015* | |
| 2 | காவல்நிலைய பெயர் குற்ற எண் | உசிலம்பட்டி நகர் கா.நி.கு.எண்:254/14 |
| | குற்றம்சாற்றப்பட்டவர்கள் குறித்த விபரம் | |
| 3 | எதிரிகளின் பெயர்: | 1.பாண்டியராஜன்<br>2.பூங்கா<br>3.சந்தியா |
| 4 | எதிரிகளின் தந்தை பெயர்: | த/பெ பழனியாண்டி<br>க/பெ பாண்டியராஜன்<br>த/பெ பாண்டியராஜன் |
| 5 | தொழில் | கூலி |
| 6 | முகவரி | எதிரிகள் குருவிளாம்பட்டி, உசிலம்பட்டி தாலுகா |
| 7 | வயது | A1 49/14 A2 47/14 A3 29/14 |
| | தேதி விபரங்கள் | |
| 8 | சம்பவம் | 28.07.14 |
| 9 | புகார் | 28.07.14 |
| 10 | கைது தேதி | ... |
| 11 | பிணை விடுப்பு | Anticipatary bail |
| 12 | Committal: | N.A. |
| 13 | விசாரணை துவக்கம் : | 20.08.2015 |
| 14 | விசாரணை முடிவு : | 17.07.2023 |

| | | |
|---|---|---|
| 15 | தண்டனை (அ) ஆணை : | குற்றவாளிகள் இல்லை |
| 16 | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிகளுக்கு சார்பு செய்தல் | இல்லை |
| | Case Summary | |
| 17 | Period of Remand of the accused: | .... |
| 18 | Date of filing of the final report : | 12.02.2015 |
| 19 | Date of Questioning under Sections 240, 246 & 251 Cr.P.C: | 20.08.2015 |
| 20 | Miscellaneous Petition and their results : | ... |
| 21 | Date of examination in chief and cross : | |

| P.W. | Chief | Cross |
|---|---|---|
| 1. | 27.07.2022 | 27.07.2022 |
| 2. | 10.10.2022 | 10.10.2022 |
| 3. | 10.10.2022 | 10.10.2022 |
| 4. | 10.10.2022 | 10.10.2022 |
| 5. | 20.04.2023 | 20.04.2023 |

| | | |
|---|---|---|
| 22 | Date of examination accused under Section 313 Cr.P.C : | 19.06.2023 |
| 23 | Details of abscondence of accused and his appearance/production: | Nil |
| 24 | Grant of stay by Superior Court and the results thereof : | Nil |
| 25 | காலதாமதத்திற்கான காரணம்: மேற்படி வழக்கில் இறுதி அறிக்கை புலன் விசாரணை அதிகாரியால் 09.10.14 அன்று தயார் செய்யப்பட்டு 12.02.15 அன்று இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது. 13.02.15 அன்று எதிரிகள் மீதான குற்றத்தை கோப்பிற்கு எடுத்து அதன் பின் எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டுள்ளது. 20.08.2015அன்று எதிரிகளிடம் முதல்நிலை விசாரணை செய்தும், பின்னர் சாட்சிகள் விசாரித்தும் எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313-ன் கீழ் விசாரணை செய்தும், இந்நாளில் தீர்ப்புரை பகரப்படுகிறது. | |

இவ்வழக்கானது 13.02.2015-ம் தேதி இந்நீதிமன்றத்தின் கோப்புக்கு எடுக்கப்பட்டு 17.07.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசுக் குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 திருமதி.G.முத்துவள்ளி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.M.குபேந்திரன் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்களை முறையாக பரிசீலனை செய்து இருதரப்பும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கின் சாட்சி சிவக்குமார் என்பவரும் 1வது எதிரியும் மூத்த இளைதாரத்து வாரிசுகள் என்றும், இருவருக்கும் பொது சொத்து பாகம் பிரிப்பது சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்ததாகவும், 28.7.14ம் தேதி காலை 07.30 மணியளவில் மேற்படி சாட்சி அவரது இடத்து அருகில் சாட்சிகளுடன் நின்று பேசிக்கொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் கையில் ஆயுதங்களுடன் வந்து மேற்படி சாட்சியைப் பார்த்து ஏண்டா தேவடியா, அவுசாரி மகனே உனக்கு இங்கு என்னடா வேலை என்று சொல்லி திட்டி, 1வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் இடது கை சுண்டுவிரல் அருகே வெட்டி சாதாரணக்காயத்தையும், 2வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியின் மரப்பிடியால் மேற்படி சாட்சியின் தலையில் அடித்து சாதாரண காயத்தையும் 3வது எதிரி கல்லால் மேற்படி சாட்சியின் இடது பக்க வயிற்றில் குத்தி சாதாரணக்காயத்தை ஏற்படுத்தியதாகவும். இந்த இடத்து பக்கம் வந்தால் உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றதாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b),324 மற்றும் 506(ii)-ன்படி உசிலம்பட்டி நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.எதிரிகள் அழைப்பாணையின் பேரில் ஆஜரானவுடன், அரசுத்தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு குவிமுச பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கி குற்றங்கள் பற்றி வினவியபோது, குற்றங்களை எதிரிகள் மறுத்துரைத்துள்ளனர். பின்னர் அரசுத்தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b),324 மற்றும் 506(ii)-ன்படியும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்துரைத்துள்ளனர்.

3.இவ்வழக்கின் எதிரிகள் குற்றங்களை மறுத்துள்ளதால் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசுத்தரப்பில் அசா1 முதல் அசா5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அசாஆ1 முதல் அசாஆ5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடும் செய்யப்பட்டுள்ளன.

4.மேற்சொன்ன சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் விபரம் வருமாறு:

இவ்வழக்கில் புகார் கொடுத்த நபரான சிவக்குமார் மற்றும் சம்பவ சாட்சியான பசும்பொன் ஆகியோர் இறந்துவிட்டதாக அரசுத்தரப்பில் அறிக்கை தாக்கல் செய்துள்ளதால் அவர்களை சாட்சியாக விசாரிக்க இயலவில்லை. இந்நிலையில், அசா1ஆக லிங்கம் என்பவர் விசாரிக்கப்பட்டார். அவரது சாட்சியத்தில், கடந்த 2014ம் ஆண்டு காலை 7.30 மணியளவில் தோட்டத்தில் இருந்தபோது கோவில் அருகே எதிரிகள் புகார்தாரருடன் சண்டை போட்டதாக சொன்னதாகவும், சண்டை முடிந்தவுடன் பார்த்தாகவும் சிவக்குமாருக்கு விரலில் காயம் ஏற்பட்டிருந்ததாகவும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அசா2 பழநி மற்றும் அசா3 முருகன் ஆகியோர் சம்பவத்தை கேள்விப்பட்டதாக சாட்சியமளித்துள்ளார்கள். அசா4அருண்பாண்டி சம்பவம் சம்பந்தமாக போலீசார் சம்பவஇடத்தை பார்வையிட்டு தயாரித்த மகஜரில் கையெழுத்திட்டதாக சாட்சியமளித்துள்ளார். பார்வைமகஜர் அசாஆ1ஆக குறியிடப்பட்டது. அசா5 ராணி சார்பு ஆய்வாளர் அவரது சாட்சியத்தில், உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 28.07.2014ம் தேதி 17.00 மணிக்கு உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த சிவக்குமார் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று வழக்குப்பதிவு செய்ததாகவும் சம்பவயிடம் சென்று சம்பவ சாட்சிகள் அருண்பாண்டி,

அரவிந்தன் ஆகியோர் முன்னிலையில் பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், காயம்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்றதாகவும் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளார். புகார் மனு அசாஆ2ஆகவும், முதல்தகவல் அறிக்கை அசாஆ3ஆகவும், மாதிரி வரைபடம் அசாஆ4ஆகவும், காயச்சான்று அசாஆ5ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.இவ்வழக்கில், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங் களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் விபரங்கள் குறித்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன்படி வினவியபோது, சாட்சிகளின் சாட்சியங்கள் பொய் என்றும், பொய் வழக்கு என்றும் பதில் அளித்தனர். எதிரிகள் தரப்பில் ஒருவரும் விசாரிக்கப்படவில்லை.

6.இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீதான குற்றங்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

7.அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே, எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்கள்.

8.எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் அரசுத்தரப்பில் இந்த வழக்கு

சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து விடுதலை செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

9.முன்விரோதம் காரணமாக எதிரிகள் மூவரும் கையில் ஆயுதங்களுடன் வந்து புகார்தாரர் சிவக்குமாரை பார்த்து அசிங்கமாக திட்டி, 1வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் இடது கை சுண்டுவிரல் அருகே வெட்டி சாதாரணக் காயத்தையும், 2வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியின் மரப்பிடியால் மேற்படி சாட்சியின் தலையில் அடித்து சாதாரணக்காயத்தையும் 3வது எதிரி கல்லால் மேற்படி சாட்சியின் இடது பக்க வயிற்றில் குத்தி சாதாரணக்காயத்தையும் ஏற்படுத்தியதாகவும் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றதாகவும் எதிரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

10.மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்து பரிசீலனை செய்கையில் இவ்வழக்கில் புகார் கொடுத்த நபர் இறந்துவிட்டதாகவும், சம்பவத்தை கண்ணுற்ற நபரும் இறந்துவிட்டதாகவும் அரசுத்தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அவர்களை வழக்கில் சாட்சியாக விசாரிக்க இயலவில்லை. இந்நிலையில் சம்பவத்தை கண்ணுற்ற மற்ற சாட்சியான அசா1 முதல் விசாரணையில் சம்பவம் முடிந்த பின்பு வந்து பார்த்தேன் என்றும், சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். சம்பவத்தை கேள்விபட்டதாக சொல்லப்படும் அசா2 சம்பவத்தின்போது யாருக்கு காயம் என்று எனக்கு தெரியாது, போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் இறந்துவிட்டதாலும், சம்பவத்தை கண்ணுற்றதாக விசாரிக்கப்பட்ட அசா1 மற்றும் சம்பவத்தை கேள்விப் பட்டதாக விசாரிக்கப்பட்ட அசா2,3ம் சம்பவத்தின்போது எதிரிகள் புகார்தாரரை அசிங்கமாக பேசியதாகவோ, அவரை தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாகவோ எந்த விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள்

மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11.அசா1,2,3 நபர்களின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் பார்வைமகஜர் சாட்சியான அசா4ன் சாட்சியத்திருந்தோ, அசா5 விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்து மட்டுமே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

12.மேலே விவாதித்த காரணங்களினால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b),324 மற்றும் 506(ii)-ன்படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

13.முடிவில், எதிரிகளை இதச பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506(ii)-ன்படி குற்றவாளிகள் அல்ல எனத் தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப் படுகிறது.

14.இவ்வழக்கில் சொத்து இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2023ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் நாள் அவையறிய பகரப்பட்ட தீர்ப்புரையாகும்.

S MAHARAJAN Digitally signed by S MAHARAJAN
Date: 2023.07.26 05:01:27 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1,
உசிலம்பட்டி.

*அட்டவணை:*

*<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>:*

அசா1 லிங்கம்

அசா2 பழனி

அசா3 முருகன்

அசா4 அருண்பாண்டி

அசா5 ராணி, சார்புஆய்வாளர்

*<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>:*

அசாஆ1 பார்வைமகசர்

அசாஆ2 புகார் மனு

அசாஆ3 முதல்தகவல் அறிக்கை

அசாஆ4 மாதிரி வரைபடம்

அசாஆ5 காயச்சான்று

சான்று பொருள்: இல்லை

எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

S MAHARAJAN Digitally signed by S MAHARAJAN
Date: 2023.07.26 05:02:00 +0200

மா.உ.மற்றும் நீ.ந.எண்:1,உசிலம்பட்டி

குறிப்பு :
1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு அறிக்கை வழங்கப்பட்டது.
2. எதிரிகள் முன்ஜாமின் பெற்று பிணையில் சென்றுள்ளனர்.